https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

02[ND] JULY 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 34





# ரணிலை மீண்டும் ஜனாதிபதியாக்கும் நகர்வு:



# பிரசன்ன லான்சா காஞ்சன களத்தில்...!!!

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்குவதற்கான நகர்வு இப்போதிருந்தே இடம்பெறுகிறது.

மொட்டு கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரை வைத்தே இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறார் ரணில் விக்ரமசிங்க.


குறிப்பாக அமைச்சர்கள் பிரசன்ன ரணதுங்க,காஞ்சன விஜேசேகர மற்றும் நிமால் லான்சா ஆகியோரின் தலைமையிலேயே இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

கொழும்பு மலலசேகர மாவத்தையில் உள்ள வீடு ஒன்றில் இருந்துதான் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மொட்டு கட்சியின் முக்கியஸ்தர்கள் மூவர் அந்த வீட்டுக்கு பொறுப்பாக நிறுத்தப்பட்டு அவர்களின் ஊடாக பிரசார பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஏனைய கட்சி உறுப்பினர்களுக்கு

02 ▶






# 1 நாளைக்கு கோடி ரூபா நஷ்டம்

பயணிகள் டிக்கட் இன்றி பயணிப்பதால் ரயில்வே திணைக்களத்துக்கு ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

தினமும் இவ்வாறு ஒரு லட்சத்துக்கும் அதிகமான பயணிகள் இவ்வாறு பயணிப்பதாக ரயில்வே திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

02 ▶








# புதிய தூதுவர்கள் 22 பேர் விரைவில்...



இலங்கைக்கான வெளிநாட்டு தூதுவர்கள் 22 பேர் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர் என்று அரச தகவல்கள் கூறுகின்றன.

அவர்களுள் 8 பேர் ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தர்கள் என்று அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

மேலும் பல அரச நிறுவனங்களுக்கு புதிய தலைவர்கள் பலர் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் அந்த நிறுவனங்களின் பணிப்பாளர்கள் சபையில் மாற்றம் செய்யப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புதுசுடர்
www.puthusudar.lk
2023 JULY 02 - SUNDAY

# பாடாய் படுத்தும் அஸ்வெசும

பொருளாதார பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு என்னதான் நடவடிக்கை எடுத்தாலும் அந்த நடவடிக்கையை மக்கள் உணராதவரை-அந்த நடவடிக்கை மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காதவரை அதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை.

பணவீக்கம் இத்தனை வீதம் குறைந்துள்ளது பொருளாதார வளர்ச்சி இத்தனை வீதம் அதிகரித்துள்ளது என்றெல்லாம் புள்ளி விவரங்களை காட்டுவதன் மூலம் எந்த நன்மையையும் இல்லை. அந்த புள்ளி விவரங்கள் எவையும் அடிமட்ட மக்களுக்குத் தேவை இல்லை. அவர்களுக்குத் தேவை அவர்களின் பிரச்சினைகள் தீர்கிறதா என்பதுதான்.

ஆனால், மக்களுக்காக செய்கிறோம்-மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கிறோம் என்று கூறிக்கொண்டு அரசு செய்யும் சில நடவடிக்கைகள் அவர்களுக்கே எதிராக அமைவதைக் காண்கிறோம்.

அப்படியானவற்றில் ஒன்றுதான் அஸ்வெசும என்ற திட்டம்.சமூர்த்திக்கு பதிலாக கொண்டுவரப்பட்டியிருக்கும் இந்தத் திட்டம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அதற்கு காரணம்,சமூர்த்தி நிவாரண உதவி பெற்றுக்கொண்டு வந்த அதிகமானவர்கள் நீக்கப்பட்டு புதியவர்கள்-வசதி படைத்தவர்கள் புதிதாக சேர்க்கப்பட்டமைதான்.

இன்று இதற்கு மக்கள் நாடுபூராகவும் போராட்டத்தில் குதித்துள்ளனர்.இந்தத் திட்டம் ஓரிரு இடங்களில் மாத்திரம் பிரச்சினையை ஏற்படுத்தவில்லை. நாடுபூராகவும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மக்களின் எதிர்ப்பு அதிகரித்ததும் முறைப்பாடு செய்யுங்கள்அது செய்யுங்கள்,அது செய்யுங்கள் என்று கூறி சமாளிப்பதில் அர்த்தமில்லை.மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்ற நிலையில் இன்னும் இவ்வாறான சிக்கலான திட்டங்களை கொண்டுவந்து மக்களை மேலும் மேலும் சிக்கலில் தள்ளுவதை அரசு நிறுத்த வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெறுவதற்காக அந்த நிதியத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தம் காரணமாக மக்கள் பெரும் கஷ்டத்தில் வீழ்ந்துள்ளனர்.

வரி அதிகரிப்பு-மின்கட்டண அதிகரிப்பு என ஏகப்பட்ட பாதிப்புக்களை மக்கள் எதிர்கொண்டுள்ளனர். அந்த நிதியத்திடம் இருந்து பெற்றுக்கொண்ட நிதியால் மக்கள் அடைந்த நன்மையை விட அந்த நிதியால் அடைந்த தீமைதான் அதிகம்.

இன்று மக்கள் மின்கட்டண அதிகரிப்பால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.இந்தக் கட்டணத்தை ஏழைகளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

உதாரணத்துக்கு சமுர்த்தி உதவி பெறும் குடும்பத்தின் மாதாந்த சமுர்த்தி உதவி தொகை ஆயிரம் ரூபா என்றால் அந்த வீட்டுக்கு மாதாந்தம் வரும் மின் கட்டணம் இரண்டாயிரம் ரூபா.

இதை எப்படி மக்களால் தாங்கிக்கொள்ள முடியும்? இதுதான் பொருளாதார வளர்ச்சியா? இதைத்தான் மக்கள் எதிர்பார்கிறார்களா? கோத்தாவின் ஆட்சிக்கும் ரணிலின் ஆட்சிக்கும் பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லையே.

எரிபொருட்களின் வரிசையும் மின் வெட்டும் நீங்கியதைத் தவிர வேறு எந்த மாற்றமும் இடம்பெறவில்லை.பொருட்களின் விலைகள் குறையவில்லை. அப்படி குறைந்தாலும் அற்ப தொகையால் மாத்திரமே.

கூடும்போது பிய்த்துக்கொண்டு கூடுகிறது.

குறையும்போது மாத்திரம் சிறிய தொகையால் குறைகிறது.

ஆனால், அரசு இதையெல்லாம் பொருளாதார வளர்ச்சி என்று கூறி மார் தட்டுகிறது.

வறுமையின் விகிதம் அதிகரித்துள்ளது. புதிதாக 40 லட்சம் வறியவர்கள் உருவாகியுள்ளனர். இப்படியான நிலையில் மக்களுக்கு நிவாரணம் இல்லையென்றால் வாழ்வது ரொம்ப கஷ்டம்.

இந்த நிலையில்,அஸ்வெசும போன்ற திட்டங்களை கொண்டுவந்து மக்களுக்கு நிவாரணம் வழங்குகிறோம் என்ற போர்வையில் இருக்கின்ற நிவாரணங்களையும் பறிக்கின்ற வேலையை செய்வதை அரசு நிறுத்த வேண்டும்.

இது நாட்டு மக்கள் அனைவரையும் பாதித்துள்ளதால் அடுத்த தேர்தலில் ஆட்சியை கவிழ்க்கும் அளவுக்கு மாற்றம் பெரும் என்பதை அரசு உணர வேண்டும்.

## பொலிஸ்மா அதிபர் நியமனம்: கர்தினலின் ரகசிய கடிதம்

புதிய பொலிஸ்மா அதிபரின் நியமனம் தொடர்பில் கார்தினல் மெல்கம் ரஞ்ஜித் சபாநாயகர் உள்ளிட்ட அரசமைப்பு சபையின் உறுப்பினர்களுக்கு 3 பக்கங்களைக் கொண்ட ரகசிய கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கும் 2 பொலிஸ் அதிகாரிகளின் பெயர்களை கவனத்தில் எடுக்க வேண்டாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தங்களது கடமைகளை மீறியுள்ளார்கள் என்று இவர்கள் இருவருக்கும் எதிராக குற்றச்சாட்டுக்கள் இருப்பதால் இவர்களை கவனத்தில் எடுக்க வேண்டாம் என்று அனைத்து கத்தோலிக்க மக்களின் சார்பிலும் கேட்டுக்கொள்வதாக அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொலிஸ்மா அதிபர் இல்லாமல் இயங்கும் பொலிஸ் திணைக்களம்

பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்னவின் பதவி காலம் முடிந்து- அவருக்கு வழங்கப்பட்ட கால நீடிப்பு முடிந்தும் 6 நாட்கள் ஆகின்றன. இன்னும் புதிய பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படவில்லை.

வரலாற்றில் முதல் தடவையாக இப்படி பொலிஸ்மா அதிபர் ஒருவர் இல்லாமல் பொலிஸ் திணைக்களம் இயங்குகிறது.

கடந்த 26ஆம் திகதி சந்தன விக்ரமரத்ன ஓய்வுபெற்றுவிட்டார். அவரது பொருட்களையெல்லாம் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். பிரியாவிடை நிகழ்வுகூட அவருக்கு நடத்தப்படவில்லை.

அடுத்த பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கு இன்னும் ஜனாதிபதியால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் பொலிஸ் அமைச்சர் டிரான் அலஸ் ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடியபோதும் எதுவித முன்னேற்றமும் இல்லை.


பொலிஸ்மா அதிபருக்குத் தகுதியான எவரும் சிபாரிசு செய்யப்படாமையே இதற்கு காரணம்.

## கொழும்புக்கு தப்பிச் சென்றுள்ள தெற்கு பாதாள உறுப்பினர்கள்

தென் மாகாணத்தில் பாதாள குழுக்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. தினமும் அவர்களுக்குள் மோதல் இடம்பெற்று கொலைகள் இடம்பெற்று வருகின்றன.

இவர்களை கட்டுப்படுத்துவதற்காக-கொலையாளிகளை கைது செய்வதற்காக விசேட அதிரடி படையினர் களத்தில் குதித்துள்ளனர்.

அவர்களுக்கு பயந்து தெற்கின் அதிகமான பாதாள குழுவினர் கொழும்புக்குத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.




### ஒரு நாளைக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

இதனால் டிக்கட் சோதனை அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அலுவலக ரயில்களில்தான் இவ்வாறு பயணிகள் அதிகமாக டிக்கட் இல்லாமல் பயணிக்கின்றனர் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

### ரணிலை...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

**வலைவீசுதல் உட்பட பல வேலைத்திட்டங்கள் இந்த வீட்டில் இருந்துதான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அறிய முடிகிறது.**






இருள் சூழ்கிறது இப்போது.முடிவதாக இல்லை மக்களின் வருகை.

இருட்டில் மக்களை உள்ளே எடுக்க முடியா நிலை.புலிகளும் அதற்குள் இருப்பதால்...

அப்படியே நிறுத்துகிறார்கள் மக்களை. வீதியிலேயே...

உத்தரவிடுகிறார்கள் படையினர்.

விடியும்வரை வீதியிலேயே இருங்கள். விடிந்ததும் உள்ளே எடுப்போம்.இருட்டில் முடியாது.

அப்படியே நடக்கிறது...

இரவு முழுவதும் வீதியில்தான் அந்த மக்கள்.ஆயிரக்கணக்கான மக்கள்.

விடிகிறது.மே 18 ஆம் திகதி. உள்ளெடுப்பு ஆரம்பம்.

எஞ்சியிருக்கும் மக்கள் அனைவரையும் வருமாறு அழைக்கிறார்கள் படையினர்.அந்தப் பகுதிக்குச் சென்று...

வந்துகொண்டே இருக்கிறார்கள் மக்கள்.

புலிகளும் கூடவே.ஆயுதங்களை வீசி ...சீருடையை களைத்து...சிவில் உடையை மாற்றி...

கண்ணால் காண்கிறார்கள் படையினர்.இந்தக் காட்சியை.சற்றுத் தூ ரம் தள்ளி நின்று....

5 ஆயிரத்துக்கு மேற்பட்ட புலிகள் அவ்வாறு.எதுவும் செய்யவில்லை அவர்களுக்கு.

சில புலிகள் அவ்வாறு நுழைய...சில புலிகள் வேறு விதமாக...

அவர்கள் சுடுகிறார்கள் படையினரை நோக்கி..

தோட்டாக்கள் முடிய...

தூக்கி வீசுகிறார்கள் துப்பாக்கிகளை நந்திக்கடலுக்குள்...வருகிறார்கள் மக்களோடு மக்களாக...

எல்லாவற்றையும் அவதானிக்கிறார்கள் படையினர்.

அப்படியே தூக்குகிறார்கள் அவர்களை...அந்தப் புலிகளை...

எதுவும் செய்யவில்லை...

சுடவில்லை..அடிக்கவில்லை...

வேறாக்குகிறார்கள்...உணவு கொடுக்கிறார்கள்.புனர்வாழ்வுக்கு அனுப்புகிறார்கள்.

அதேபோல்....பெண் புலிகளும்...

அவர்களும் மக்களோடு மக்களாக...

தலையை மறைத்து....முஸ்லிம் பெண்களைப்போல்...

சந்தேகம் படையினருக்கு...

அந்த முக்காட்டை நீக்குகிறார்கள்.

வித்தியாசமான ஆயுதங்கள்

அள்ளிக் குவிக்கிறார்கள் அவற்றை...

குவிகிறார்கள் படையினர்.அவற்றைப் பார்ப்பதற்காகவே அவ்வளவு ஆசை.

இவர்கள் இந்தப் பக்கம்.அந்தப் பக்கம் பிரபாகரன் ,அவரது மகன் சார்ள்ஸ் .

அங்கு நடக்கிறது சண்டை.உக்கிர சண்டை

விடிகிறது.மறுநாள் 19 ஆம் திகதி.இவர்களுக்கு கிடைக்கிறது தகவல். பிரபாகரன் கொல்லப்பட்ட தகவல்.

ஒரே மகிழ்ச்சி கொண்டாடுகிறார்கள் அந்த மகிழ்ச்சியை மேலே சுட்டு...

ஓடிச் செல்கிறார்கள் அந்தப் பக்கம்.

**வாவியின் ஓரமாக.... மணல் பகுதியின் ஊடாக... 50 பேர் இருக்கும். அவர்கள் புலிகள். ஜயரத்னவின் அணி இப்போது புல் அலேர்ட். "தூரத்தில் வைத்துத் தாக்க வேண்டாம். அருகில் எடுத்துத் தாக்குங்கள்." உத்தரவிடுகிறார் தனது படைக்கு... அப்படியே செய்கிறார்கள். நடக்கிறது சண்டை. அத்தனை புலிகளும் சரி. ஒருவர்கூட தப்பவில்லை.**





# முஸ்லிம் பெண்கள் வேடத்தில் நுழைந்த பெண் புலிகள்...!!!

படையினர்.

ஒட்ட வெட்டிய தலை முடி.உசழி உரவ. ஆண்களைப்போல்...

பெண் புலிகளுக்கு மட்டுமே உரித்தான கட்டிங் அது.

அதை மறைப்பதற்காகத்தான் முஸ்லிம் பெண்கள் வேஷம்.

பரவாயில்லை...

அவர்களையும் வேறாக்குகிறார்கள்.... உணவு கொடுக்கிறார்கள். புனர்வாழ்வுக்கு அனுப்புகிறார்கள்.

காயமடைந்த புலிகளும் அங்கு. காட்டிக்கொள்ளவில்லை அவர்களை. சிவிலியன்களாகவே அக்டிங்.

ஒரு வாகனத்தில் சிலர்.அதில் ஒருவருக்கு காலில் காயம்.அவரது மனைவியும் கூடவே...

அவர் புலிதான்.அறிந்துகொண்டார் ஜயரத்ன.

தனது காலை உணவு ஜயரத்னவின் பைக்குள். அதை நீட்டுகிறார் அவருக்கு.அந்தப் புலிக்கு...

அதை வாங்கிக் கொடுக்கிறார் அந்தப் புலியின் மனைவி.

நூற்றுக்கு மேற்பட்ட சிவிலியன்கள் காயமடைந்த நிலையில்...

ட்ரக்டரில் ஏற்றி அனுப்புகிறார்கள் சிகிச்சைக்காக...

இப்படியே இருக்கையில்..ஒரு கூட்டம்.

வருகிறது காட்டுக்குள் இருந்து.

வாவியின் ஓரமாக....மணல் பகுதியின் ஊடாக....50 பேர் இருக்கும்.

.அவர்கள் புலிகள்.

ஜயரத்னவின் அணி இப்போது புல் அலேர்ட்.

"தூரத்தில் வைத்துத் தாக்க வேண்டாம். அருகில் எடுத்துத் தாக்குங்கள்."

உத்தரவிடுகிறார் தனது படைக்கு...

அப்படியே செய்கிறார்கள்.

நடக்கிறது சண்டை.

அத்தனை புலிகளும் சரி. ஒருவர்கூட தப்பவில்லை.

அவர்களுள் மிக முக்கியமான தளபதிகள்.

நடேசன். புலித்தேவன். ரமேஷ்.இப்படிப் பலர்.

நடேசனிடம் இருந்து பல பொருட்கள் மீட்பு. அவர் கையெழுத்திட்ட "ட்ரவலிங் செக் சிலவும் அவரிடம்...

## காவல் துறை பொறுப்பாளர் நடேசன் கொல்லப்பட்டது இப்படித்தான் ...!!!



எல்லா இடங்களிலும் புலிகளின் ஆயுதங்கள். இராணுவம் இதுவரைக் காணாத புதுமையான ஆயுதங்கள்.

கண்ணால் காண்கிறார்கள் பிரபாவின் உடலை.

நாமும் செல்வோம் அந்தப் பக்கம். பிரபாகரன் கொல்லப்பட்ட பக்கம். பார்ப்போம் அங்கு நடந்த சண்டையை...

பிரபாவின் மகன் சார்ள்ஸ் கொல்லப்பட்டது எப்படி...?

கடற்புலி தளபதி சூசை கொல்லப்பட்டது எப்படி ..?

பொட்டு அம்மானுக்கு என்ன நடந்தது....?

இறுதியாக பிரபாகரன் கொல்லப்பட்டது எப்படி...?

**இவை அனைத்தும் இனி வரும் தொடர்களில்...**

ஸ்ரீலங்கன் எயார் லைன் விமானங்கள் தொடர்ச்சியக தாமதமாக்குவது ஏன் ?

ஸ்ரீலங்கன் எயார் லைன்சில் இருந்து அதிகமான விமானிகள் எமிரேட்ஸ் போன்ற நிறுவனங்களில் இணைகிறார்களே..?

விமானிகளுக்கு சம்பள பிரச்சினை உள்ளதா?

விமானிகள் பல குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். கொரோனா காலத்தில் 50 வீத சம்பளமே வழங்கப்பட்டது.இப்போது வழங்கப்படும் சம்பளத்தில் 40 வீதம் குறைக்கப்பட்டே வழங்கப்படுகிறது. போன்ற குற்றச்சாட்டுக்களை அவர்கள் முன்வைக்கிறார்களே ?

அரசியல்வாதிகள் அவர்களின் உறவினர்களை-நண்பர்களை இந்த நிறுவனத்தில் உயர் பதவியில் நிறுத்தியதால் அல்லவா இந்த நிலைமைக்கு காரணம்?

# ஜனாதிபதி தேர்தலில் ரணில் போட்டியிட்டால்???



, t;thW gy Nfs;tpfSfF gjpy; toqfpdhu; mikr;r; ejkhy; rpwpghy b rpy;th. mtuJ KOikahd Ngl;b fNo:

**கேள்வி : ஸ்ரீலங்கன் எயார் லைன் விமானங்கள் தொடர்ச்சியக தாமதமாக்குவது ஏன் ?**

பதில் : வரலாற்றை எடுத்துக்கொண்டால் இந்த விமானங்கள் மட்டுமல்ல உலகின் பல விமானங்கள் பல காரணங்களால் தாமதமாகி இருக்கின்றன.

சிறிலங்கன் எயார்லைன் தாமதமாகுவதற்கு பல காரணங்கள் உள்ளன.இந்த நிறுவனம் அமெரிக்க டொலர் 1.2 பில்லியன் கடனில் உள்ள நிறுவனம். மிகவும் கஷ்டப்பட்டு இயங்குகிறது இந்த நிறுவனம்.

16 விமானங்கள்தான் எம்மிடம் உள்ளன.ஓரிடத்தில் விமானம் தாமதமானால் மாற்று விமானம் அனுப்புவதற்கு எம்மிடம் வசதி இல்லை.

எம்மிடம் ஏற்கனவே 22 இருந்ததன.இப்போது 16.இந்த 16 இல் ஒன்றுகூட எமக்கு சொந்தமில்லை.எல்லாமே வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளன.இதில் 5 விமானங்கள் பறப்பதில்லை.எஞ்ஜின் வேலை செய்வதில்லை.அதைத் நிறுத்துவதற்கான வசதி எம்மிடமில்லை.

இந்த வருடத்துக்குள் கொரியாவுக்கு 800 தடவைகள் எமது விமானம் சென்றுள்ளன.இப்போதுதான் முதல் தடவையாகத் தாமதம் ஏற்பட்டது.

மெல்பன் நகரில் தாமதம் ஏற்பட்டபோது முடியுமானவரை பயணிகள் வேறு விமானத்தில் அனுப்பப்பட்டார்கள்.சிலருக்கு ஹோட்டல் வசதிகள் வழங்கப்பட்டன. சிலருக்கு ஹோட்டலில் தங்குவதற்கு பணம் வழங்கப்பட்டது.

ஒரு விமானத்தில் 3 விமானிகள் இருக்க வேண்டும்.அதில் ஒருவர் இல்லாவிட்டாலும் சர்வதேச சட்டத்தின்படி விமானம் பறக்க முடியாது.

கொரியா செல்லும் விமானம் தாமதமான அன்று விமானி ஒசத விமலரத்ன சுகவீனமடைந்தார்.

பகல் 1.40 இற்கு அவர் தனது நோயை உறுதிப்படுத்தி வைத்திய அறிக்கையை அனுப்பி வைத்தார்.

அப்படியென்றால் வேறு ஒரு விமானியை நியமிக்க வேண்டும்.அன்றைய தினம் 20 விமானிகள் இருந்தனர்.அவர்கள் அனைவரும் விடுமுறை.

அவர்கள் ஒவ்வொருவரிடமும் தொலைபேசி அழைப்பு எடுத்து வருமாறு சொன்னபோது விடுமுறை நாளில் வரமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள்.

ஆனால், இந்த வருடம் ஜுன் 10ஆம் திகதி வரை 274 சந்தர்ப்பங்களில் விடுமுறையில் இருந்த விமானிகள் வேலை செய்தனர். அவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்பட்டது.

ஆனால், இந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் முடியாது என்று கூறிவிட்டனர்.

இப்போதுதான் அவர்கள் சொல்கிறார்கள் அவர்கள் வேலை நிறுத்தத்தில் இருந்ததாக. ஆனால்,அப்போது அவர்கள் அதுபற்றி யாருக்கும் அறிவிக்கவில்லை.எனக்கும் அறிவிக்கவில்லை.

**கேள்வி : ஸ்ரீலங்கன் எயார் லைன்சில் இருந்து அதிகமான விமானிகள் எமிரேட்ஸ் போன்ற நிறுவனங்களில் இணைகிறார்களே..?**

பதில் : அதிகமானவர்கள் செல்லவில்லை. எம்மிடம் 262 விமானிகள் இப்போதும் உள்ளனர்.பல தொழில் துறையில் இருந்து பலர் நாட்டை விட்டுச் செல்கின்றனர்.

அதுபோல்தான் இந்தத் துறையில் இருந்தும் செல்கின்றனர். அதுவும் குறிப்பிட்ட சிலர்தான்.

**கேள்வி: விமானிகளுக்கு சம்பள பிரச்சினை உள்ளதா?**

பதில்: சம்பள பிரச்சினை என்றால் இப்படித்தான்.ஏனைய வெளிநாட்டு விமான நிறுவனங்கள் வழங்குகின்ற சம்பளத்தை எம்மால் வழங்க முடியாது.

இருந்தும், மேலும் விமானிகளை இணைப்பதற்கு விண்ணப்பங்களை கூறியுள்ளோம்.126 விண்ணப்பங்கள் வந்துள்ளன.நேர்முக பரீட்சை இடம்பெற்று வருகிறது.

விலகிப் போகிறவர்கள் போகட்டும். ஆனால்,சதி வேலை செய்ய வேண்டாம். நாட்டை நேசிக்கின்ற விமானிகள் எம்முடன் இணைந்து வேலை செய்கிறார்கள்.

**கேள்வி: விமானிகள் பல குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். கொரோனா காலத்தில் 50 வீத சம்பளமே வழங்கப்பட்டது. இப்போது வழங்கப்படும் சம்பளத்தில் 40 வீதம் குறைக்கப்பட்டே வழங்கப்படுகிறது. போன்ற குற்றச்சாட்டுக்களை அவர்கள் முன்வைக்கிறார்களே?**

பதில்: கொரோனா நேரம் உலக நாடுகள் அனைத்திலும் விமான சேவை வீழ்ச்சியடைந்தது.கட்டார் எயார் வேய்சில் வேலை செய்த எமது நாட்டு விமானிகள் தொழிலில் இருந்து விளக்கப்பட்டனர்.

ஆனால், ஸ்ரீலங்கான் எயார்லைனில் அப்படி விளக்கவில்லை.50 வீத சம்பத்தளத்தை வழங்கி வைத்துக்கொண்டிருந்தோம்.

எமது நிறுவனம் இலாபம் தரும் நிறுவனம் என்றால் அதிக சம்பளத்தை வழங்க முடியும். மிகவும் சிரமப்பட்டு இதை நஷ்டத்தில் நடத்திச் செல்கிறோம்.

இதை மறுசீரமைப்பு செய்வதற்கான நடவடிக்கையில் நாம் இப்போது ஈடுபட்டுள்ளோம்.தொடர்ந்து நஷ்டத்தில் இயங்க முடியாது.

**கேள்வி: அரசியல்வாதிகள் அவர்களின் உறவினர்களை – நண்பர்களை இந்த நிறுவனத்தில் உயர் பதவியில் நிறுத்தியதால் அல்லவா இந்த நிலைமைக்கு காரணம்?**

பதில்: உண்மைதான். இதுபற்றி பேசுவதை விட இந்த நிறுவனத்தை எப்படி முன்னேற்றுவது என்பதுபற்றி பெருவதுதான் சிறந்தது.

பல நிர்வாக மோசடிகள் இடம்பெற்றமை உண்மை.அதனால்தான் இந்த நிறுவனம் இந்தளவு நட்டமடைந்தது.இதை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

இனிமேல் இப்படியான மோசடிகள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.இதற்காகத்தான் சொல்கிறோம் அரசு வர்த்தகம் செய்யக்கூடாது என்று. அப்படி செய்தால் இந்த மோசடியெல்லாம் நடக்கத்தான் செய்யும்.அரசியல் அழுத்தம் எல்லாம் இடம்பெறுவதால்.

**கொரோனா நேரம் உலக நாடுகள் அனைத்திலும் விமான சேவை வீழ்ச்சியடைந்தது. கட்டார் எயார் வேய்சில் வேலை செய்த எமது நாட்டு விமானிகள் தொழிலில் இருந்து விளக்கப்பட்டனர். ஆனால், ஸ்ரீலங்கான் எயார்லைனில் அப்படி விளக்கவில்லை. 50 வீத சம்பத்தளத்தை வழங்கி வைத்துக்கொண்டிருந்தோம்.**



**கேள்வி: சமூர்த்திக்கு பதிலான சர்சைக்குரிய அஸ்வெசும பற்றி உங்களது நிலைப்பாடு ?**

பதில்: அது உண்மையில் இறுதி பெயர் பட்டியல் இல்லை என்று அரசு கூறிவிட்டது.பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடுகள் செய்வதற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**கேள்வி: முறைப்பாடு செய்வதற்கான வழி அப் ஊடாக.கிராமத்தில் உள்ள முதியவர்களுக்கு அப் பற்றி தெரியுமா?**

பதில்: அப்படி என்றால் அது பிழை. நடைமுறைக்கு சாத்தியமில்லை.இதுபற்றி நான் நிதி அமைச்சுடன் பேசுவேன்.

**கேள்வி: அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கதான் என்று ஐக்கிய தேசிய கட்சி முக்கியஸ்தர்கள் கூறுகிறார்கள். அப்படி அவர் களமிறங்கினால் நீங்கள் அவரை ஆதரிப்பீர்களா?**

பதில்: தேர்தலுக்கு காலம் உண்டு.இன்னும் தேர்தல் அறிவிக்கப்படவில்லை.வேட்பு மனு கோரவில்லை.அதனால் இப்போதே அதுபற்றி தீர்மானிக்க முடியாது.

தேர்தல் அறிவிக்கப்பட்டால் அந்த நேரத்தில்தான் முடிவெடுப்போம். தேர்தலுக்கு முன் எதுவும் நடக்கலாம்.இப்போது ஒரு தீர்மானம் எடுத்தாலும் அதைத் தேர்தலில் மாற்ற வேண்டி ஏற்படலாம்.

அதனால் தேர்தல் அறிவிக்கப்பட்டதால் முடிவெடுப்பதே ஆரோக்கியமானது.

**கேள்வி: நீண்ட அரசியல் அனுபவம் உள்ளவர்கள் நீங்கள்.உங்களது அரசியல் எதிர்பார்ப்பு என்ன?**

பதில்: விசேடமான எதிர்பார்ப்பு எதுவுமில்லை.மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் அவ்வளவுதான்.என்றார்.



# கோத்தாவின் பிறந்த நாளை கொண்டாடிய எம்பிக்கள்

கடந்த மாதம் 20ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஸவின் பிறந்த நாளாகும்.

அந்த பிறந்த நாளை மொட்டு எம்பிக்கள் பலர் கோத்தாவுடன் சேர்ந்து ஆடிப்-பாடி கொண்டாடி மகிழ்ந்துள்ளனர்.

அன்றைய தினம் மாலை 6 மணிக்கு மிரிஹானையில் அமைந்துள்ள கோத்தபாயவின் இல்லத்தில் ஒன்றுகூடினர் இந்த எம்பிக்கள்.

லொஹான் ரத்வத்த இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

மஹிந்தானந்த அழுத்கமகே-அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய இருவரும் வேறு சில ஏற்பாடுகளை செய்தனர்.

சம்பத் அத்துகோரல,சாமர சம்பத் தசாநாயக,சமன் பிரிய ஹேரத் ஆகியோர் பாடல்களை பாடினார்.

இரவு வரைத் தொடர்ந்த அந்த நிகழ்வை இவ்வாறு கொண்டாடி மகிழ்ந்தனர் எம்பிக்கள்.

என்னதான் இருந்தாலும்-அவர் நாட்டுக்கு என்னதான் அநியாயம் செய்திருந்தாலும்,இவர்களுக்கு அவர் முன்னாள் ஜனாதிபதிதானே.



# மஹிந்தவை சுற்றிவளைத்த சகாக்கள்...

கடந்த வாரம் நாடாளுமன்றில் அமைந்துள்ள எம்பிக்கள் உணவகத்தில் பகல் சாப்பாட்டை சாப்பிட்டுக்கொண்டிருந்தார் மஹிந்த ராஜபக்ச.

அப்போது ஆளுங்கட்சி-எதிர்க்கட்சி என பல எம்பிக்கள் திடீரென மஹிந்தவை சுற்றி வளைத்தனர்.

ஏதும் முக்கியமான பிரச்சினையோ என்று எட்டிப் பார்த்தால் அப்படி ஒன்றுமில்லை.

பழைய கதைகளை எல்லாம் மஹிந்த அவிழ்த்துவிட, மஹிந்தவை சூழ்ந்து அதைக் கேட்டு சிரித்துக் கொண்டிருந்தனர் அந்த எம்பிக்கள்.






# அரசியல் பாடம் நடத்திய பிரசன்ன

கடந்த வாரம் கம்பொளவில் மொட்டு கட்சியின் தொகுதிக் கூட்டம் ஒன்று இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்னவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,அமைச்சர் காஞ்சன விஜேசேகர,மஹிந்தானந்த அழுத்கமகே உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

அப்போது "இப்படி நிறைய மக்கள் வரும் என்று நான் நினைக்கவே இல்ல. உண்மையில் நான் பயந்து போய் இருந்தேன். ஆட்கள் வராதெண்டு பயந்து..." என பிரசன்னவிடம் கூறினார் அனுராத...

" அப்டி இல்ல தம்பி.மக்கள் மொட்டு கட்சியோடதான் இருக்காங்க.நாம கொஞ்சம் கிராமம் கிராமமா இறங்குனா தெரியும்.ஜேவிபிட கத முடிஞ்சிடும்.

"அரசியல் செய்றண்டா.. பார்ட் டைம் சரி வரா தம்பி.புள் டைமா இறங்கணும்.தொடர்ந்து மக்கள் கிட்ட போகணும்.நான் அப்டித்தான் செய்ற."

இப்படி அவருக்கு, எப்படி அரசியல் செய்வதென்று சிறிது நேரம் பாடம் நடத்தினார் பிரசன்ன.

# கோத்தாவுக்கு வஜ்ஜிரவின் வீடு

கடந்த வாரம் வஜ்ஜிர அபயவர்தன.மதுர விதானகே,சஹன் பிரதீப் மற்றும் குணதிலக ராஜபக்ச உள்ளிட்ட பலர் நாடாளுமன்றில் சந்தித்து உரையாடினர்.

அப்போது முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கதை அதற்குள் அடிபடத் தொடங்கியது.

மக்கள் கோத்தாவை மீண்டும் அனைத்துக்கொள்வார்கள் என்று பத்திரிகை ஒன்றில் கூறி உள்ளீர்களே .அது ஏன் என்று வஜ்ஜிரவிடம் கேட்டார் மதுர.

"உண்மைதான்.அவர் சர்வதேசத்துக்கு அடிபணியவில்லை.மக்களுத்தான் அடி பணிந்தார்.மக்களுக்கு அடிபணிந்து பதவியை விட்டு விலகினார். ஒரு துளி இரத்தம்கூட சிந்தவில்லை. இதனால் மக்கள் அவரை மீண்டும் அனைத்துக்கொள்வார்கள்.

அவர்க்கு வீடு வழங்குவதுபற்றி விமர்சிக்கப்படுகிறது.அவருக்கு எனது வீட்டை கேட்டால்கூட நான் கொடுக்கத் தயார் என்றார் வஜ்ஜிர.





# மஹிந்தவின் பாதுகாப்பு அதிகாரிக்கு பாராட்டு

மஹிந்த ராஜபக்சவின் பிரதான பாதுகாப்பாளர் நெவில் வன்னியாராய்ச்சி.நீண்ட காலமாக மஹிந்தவுடன் இருப்பவர்.

கடந்த வாரம் நாடாளுமன்றில் வைத்து நெவிலை திடீரென சந்தித்தார் அனுர பிரியதர்சன யாப்பா.அப்போது இருவருக்கும் கதை கொழுவியது.

அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கீழே தடுக்கி வீழ்ந்தபோது உங்களது ஞாபகம்தான் வந்தது என்றார் பிரசன்ன.

அது ஏன் என்று வினவினார் நெவில்.

அந்த இடத்தில் நீங்கள் இருந்திருந்தால் பைடன் வீழ்ந்திருக்கமாட்டார்.நீங்கள் எப்படி மஹிந்தவை பாதுகாக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன்.

புலி பயங்கரவாதிகள் மஹிந்தவை நெருங்க முடியாதவாறு பாதுகாத்தீர்கள் என்று கூறினார் அனுர.

ஓம் சேர்.. மஹிந்த சேரை பாதுகாப்பதற்கு நான் முக்கிய இடத்தைக் கொடுக்கிறேன் என்றார் நெவில்.

# ரவி எங்கே?

ஐக்கிய தேசிய கட்சியின் முன் வரிசை தலைவர்களுள் ஒருவர்.முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க.

கடந்த காலங்களில் கட்சியை கட்டியெழுப்புவதில் அதிக பங்காற்றியவர்.இப்போது சற்று ஒதுங்கி இருப்பதை காண முடிகிறது.

அதற்கு கரணம் கட்சிக்குள் அவர் எதிர்பார்த்தது அவருக்கு கிடைக்காமைதான். அவர் எதிர்பார்த்த விடயங்களுள் ஒன்று கட்சியின் பொது செயலாளர் பதவி.அது கிடைக்கவில்லை.

அதற்கு முன் அந்த தேசிய பட்டியல் எம்பி பதவியை எதிர்பார்த்தார்.அது ரணிலிடம் இருந்து வஜ்ஜிரவுக்கு சென்றுவிட்டது.

இதனால் கடும் அதிருப்தியில் இருக்கிறார் ரவி.

கடந்த வாரம் மத்திய கொழும்பு ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. அதில் ரவி கலந்துகொள்ளவில்லை.

அதில் கலந்துகொண்ட ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் ரவி கலந்துகொள்ளாமை தொடர்பில் தலைமை ஆசனத்தில் இருந்தவர்களிடம் கேள்வி எழுப்பினர். ஆனால்,பதில் இல்லை.

இதனால் அங்கு ஒரு சலசலப்பு ஏற்பட்டது.

ரவி இல்லாமல் கட்சியைக் கட்சியெழுப்ப முடியுமா என்று பேசிக்கொண்டனர்.

# ரவியின் வீட்டுக்கு படையெடுத்த அமைச்சர்கள்



rpy ehlf;Sf;F Kd;mikr;ruf;s; rpyu;utpad; tPl;Lf;F nrd;W eyk; tprhupj;Js;sdu;$lNt fl;rpapy; ,Ue;J xJq;fp ,Uf;fpd;wik njhlu;gpYk; tprhupj;Js;sdu;

,gNghJ fl;rpapy; rpy N[hf;fuf;s;jhd; cs;sdu;mtu; igj;jpak; tpi sahLfpd;wdu; mLj;J tugNghtJ [dhjpgjp Njuj;y;

Mdhy;fl;rpia ,d;Dk; fl;b vOg;g tpy;iy.,ej; epiyapy; vg;gb Njuj;iy vjpu;nfhs;tJ vd;W utp mtuf;spl;k; $wpAs;shu;

- சின்னத்தம்பி குருபரன் -

தொடர் - 01



# இலங்கையில் சிறுபான்மையினர் புறக்கணிப்புக்களும் சுதந்திர சமத்துவமின்மையும்

## - ஒரு வரலாற்றுப் பார்வை -

இலங்கை மகாவம்ச காலத்தில் இருந்து இன்றுவரை இலங்கைத் தமிழர்களை அந்நியர்களாகவும் சிறுபான்மையினர்களாகவும் பார்க்கும் இனத்துவப் போக்கொன்று வளர்ந்து வேரூன்றி இருப்பதை கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறோம்.

இப்போக்கு 1945 ஆம் ஆண்டிலிந்து இலங்கையின் அரசியல், பொருளாதாரம், கல்வி, குடியேற்றம், காணிச் சுவிகரிப்பு என்பவற்றில் வெளிப்படையாகவே புறக்கணிப்பு இடம்பெற்று வருவதை அப்பட்டமாகக் காணமுடிகின்றது. இவை சிறுபான்மையினர் நலனுக்குப் பாரிய சவாலக அமைகின்றன. இந்த விடயத்தை வரலாற்று ரீதியாக நோக்குவதே இக்கட்டுரையாகும்.

திருமூலர் சிவபூமி எனக் குறிப்பிடும் இலங்கையைச் சிவபக்தனாகிய இராவணன் ஆட்சி செய்தான் என  இராமாயணம் கூறுகின்றது.

பின்னர் யக்சர்களும் இயக்கர், நாகர் எனப்படும் ஆதிக்குடிவாசிகளும் ஆண்டனர் என்பதை அறிகின்றோம்.

பின்னர் இந்தியத் தொடர்புகளும் மேலாதிக்கமும் காரணமாக இந்தியப் பேரரசர்கள், குறுநில மன்னர்கள், வியாபாரிகள், அதன் பரம்பரையினர் போன்றோரும். இலங்கை மன்னர்களும் ஆட்சி செய்தனர் என்பதை நூல்கள், கல்வெட்டுக்கள், ஆதாரங்களினூடாக அறிய முடிகின்றன. அதன் பின்னர் ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுகள் அந்நியர் ஆட்சிக்கும் உட்பட்டிருந்தது.

கி.மு மூன்றாம் நூற்றாண்டில் உறுகுணையை (மகாகம) ஆட்சி செய்த துட்டகைமுணு மன்னன் எல்லாளனை யுத்தத்தில் வெற்றி கொண்டு அனுராதபுரத்தைக் கைப்பற்றினான் என மகாவம்சம் கூறுகின்றது. இலங்கையை ஆட்சி செய்த பெரும்பாலான சிங்கள மன்னர்களுக்குக் குருவாகவும் மந்திரிமார்களாகவும் புரோகிதர்களாகவும் தமிழர்களும் தமிழ் பிராமணர்களுமே இருந்து வந்திருக்கின்றனர் என்பதனை வரலாற்றுச் சான்றுகள் நிரூபிக்கின்றன.

உறுகுணை இராச்சியத்தை துட்டகைமுணுவின் தந்தை காக்கவண்ணதீஸன் ஆட்சி செய்தபோது இவர்களுக்குக் குலகுருவாக இருந்தவர் மகாநாம தேரர். அந்தவேளையில் சோழமன்னன் எல்லாளன் அனுராதபுரத்தை ஆட்சி செய்து வந்தான்.

இவன் இன. மத, மொழி வேறுபாடுகள் அற்றவகையில் நல்வாட்சி செய்து வந்தான் என மகாவம்சம் தீபவம்சம் ஆகியன குறிப்பிடுகின்றன. எல்லாளனோடு உறுகுணைமன்னன் காக்கவண்ணதீஸன் பட்டத்துராணி விகாரமகாதேவி ஆகியோர் அரசியல் ரீதியாகவும், நட்பு ரீதியாகவும் ஆழமான உறவு கொண்டிருந்தனர்.

இந்த உறவு மகாநாம தேரருக்குக் கசப்பையும் கடுப்பையும் ஏற்படுத்தி இருக்க வேண்டும். அதனால் அவரிடம் பகையுணர்ச்சி கொழுந்துவிட ஆரம்பித்திருக்க வேண்டும். இப்பகை தீர்க்கும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டவன்தான் துட்டகைமுணு. இதனால் மகாநாம தேரர் அவனிடம் பகை உணர்வை வளர்த்துவிட எண்ணி இனத் துவேசதை வளர்த்து வந்தார்.

இதனை இலங்கையின் பிரபல வெளியீட்டு நிறுவனம் ஒன்றினால் தரம் மூன்றில் கற்கும் மாணவர்களுக்கான மேலதிக வாசிப்பு நூலில் ஒரு கதை ஊடாக இதனை அறிய முடிகின்றது. பட்டத்துராணி விகாரமகாதேவி காலை உணவு கொடுப்பதற்காகத் துட்கைமுணுவை அழைத்து வரச் செல்கிறாள்.

அப்போது  காலை மடித்துச் சரிந்து பஞ்சணையில் உறங்கிக் கொண்டிருக்கும் துட்டகைமுணுவிடம் "இத்தனை பெரிய பஞ்சணை இருக்கையில் நீட்டி நிமிர்ந்து உறங்காமல் இவ்வாறு ஏன் காலை மடித்து உறங்குகிறாய். எழுந்து சாப்பிட வா" எனக்கூறி அழைத்தபோது துட்டகைமுணு "தெற்கு, மேற்கு, கிழக்குப் பக்கமெல்லாம் கடல் சூழ்ந்திருக்கிறது.

வடக்கில் (அனுராதபுரம் – எல்லாளன்) தமிழன் நெருக்குகிறான். இவ்வாறு இருக்கையில் நீட்டி நிமிர்ந்து எவ்வாறு உறங்க முடியும். நீட்டி நிமிர்ந்து உறங்குவதென்றால் கடலில்தான் விழ வேண்டும்." எனக் கூறுவதாக அந்நூலின் கதை சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

அனுராதபுர இராச்சியத்தைத் தேவநம்பியதீஸனின் பின்னர் சூரதிஸ்ஸன்(கி.மு.248-237) ஆட்சி செய்தான். அவனிடமிருந்த ஆட்சியை குதிரை வணிகர்களான சேனன், குத்திகன் (கி.மு 237-215) ஆகிய இருவரும் கைப்பற்றி ஆட்சி செய்ததை தீபவம்சம் தமிழர்களின் ஆட்சி எனக் குறிப்பிடுவதற்குப் பதிலாக "தமிள" ஆட்சி எனக் குறிப்பிடுகின்றது.

இவர்களின் பின்னர் தேவநம்பியதீஸனின் தம்பியாகிய அசேலன் (கி.மு 215-205) ஆட்சி செய்கின்றான். இவனிடமிருந்த ஆட்சி அதிகாரத்தைச் சோழ மன்னன் எல்லாளன் (கி.மு 205-159) 44 ஆண்டுகள் நல்லாட்சி செய்தான் என மகாவம்சம், தீபவம்சம் ஆகியன குறிப்பிடுகின்றன.

துட்டகைமுணு இலங்கையில் 32 மன்னர்களைத் தோற்கடித்து இறதியில் நீதிநெறி தவறாது இன, மத, மொழி வேறுபாடுகள் அற்றவகையில் நல்லாட்சி நடத்திய எல்லாளனை 44 ஆண்டுகளின் பின்னர் தோற்கடித்தான் என மகாவம்சம் கூறுகின்றது.

அதே நூல் இவ்யுத்தத்தை தமிழ் – சிங்கள இனப் போராட்டமாகச் சித்திரிக்கின்றது. அவ்வாறாயின் மகாவமச ஆசிரியர் மகாநாம தேரர் தோற்கடிக்கப்பட்ட 32 தமிழ் மன்னர்களும் இலங்கையில் எங்கு எவ்விடத்தில் ஆட்சி செய்தார்கள் என்பதைக் கூற மறுத்தது ஏன் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

இங்கு இன, மொழி ரீதியான உணர்வு மேலோங்கி இருக்கிறது என்பதே நிதர்சனமாகும். இதனை ஒரு மிகைப்படுத்தலாகவே வரலாற்றாய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்வாறே தமிழர்கள் பற்றி தீபவம்சம், சூளவம்சம் போன்றவற்றிலும் வரலாற்று ஆய்வாளர் பேராசிரியர் பரணவிதான அவர்களின் ஆய்வுகளிலும் பல வரலாற்று உண்மைகளும் நிகழ்வுகளும் திட்டமிட்டு மறைக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் உள்ளன.

இந்த உண்மைகள் சிலவற்றை வெளிக்கொணர முற்பட்ட தமிழ் வரலாற்றாய்வாளர்கள் பலர் இலங்கையில் இருந்து திட்டமிட்டு வெளியேற்றப்பட்டிருக்கின்றார்கள். அவற்றுள் பிரதானமான ஒருவர் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை சிரேஷட விரிவுரையாளர் திரு. குணசிங்கம்.

துட்டகைமுணு சதி செய்து எல்லாளனைத் தோற்கடித்துக் கொலை செய்திருந்தாலும் எல்லாள மன்னனுக்கு இறுக்கிரியையின்போதும் அதற்குப் பின்னரும் கொடுத்த மரியாதையும் மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

துட்டகைமுணுவைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மகாநாம தேரரால் எழுதப்பட்ட இந்நூலில் பிற்பட்ட காலத்தில் கூறவந்த இனரீதியான கருத்துக்கள் பல துட்டகைமுணுவினால் நீக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை மகாவம்சத்தை ஆய்வு செய்ய முற்படும் வரலாற்றாய்வாளர் ஒருவர் இனங்கண்டு கொள்வார். இதனைப் பலரும் கூறியும் இருக்கின்றனர்.





இலங்கையில் 1972 இன் பின்னர் பாடசாலைகளில் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும் வரலாற்றுப் பாடநூல்களில் தமிழ் மன்னர்களை வெற்றி கொண்ட சிங்கள மன்னர்களை மாத்திரம் கதாநாயகர்களாகச் சிறப்பித்தும் மிகைப்படுத்தியும் காட்டப்பட்ட வரலாற்றுப் பாடமே கற்பிக்கப்படுகின்றன.

சேர, சோழ, பாண்டிய, கலிங்க, நாயக்க மற்றும் அரியச் சக்கரவர்த்திகள் பலர் குறிப்பாக சோழ, கலிங்க மன்னர்கள் இலங்கையைச் சூறையாடிச் சென்றார்கள் என்றும், கொடுங்கோல் ஆட்சி நடத்தினார்கள் என்றும் பௌத்த மதத்துக்கும், சிங்களவர்களுக்கும் ஊறு விழைவித்தார்கள் எனவும் நாசுக்காக இனவாதம் திணிக்கப்பட்டிருக்கின்றன.

உண்மையில் கூறப்போனால் வரலாறு பாட நூலாக்கக் குழுவில் தமிழ், முஸ்லிம் இனங்களைச் சார்ந்தவர்கள் உள்வாங்கப்படுவதில்லை. பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்களை மாத்திரம் உள்ளடக்கிப் பௌத்த சிங்கள வீரதீர வரலாற்றினையும் அதன் கலாசாரத்தினையும் திட்டமிட்டு உட்புகுத்தி சிங்கள மொழியில் எழுதிய வரலாற்று நூலினைத் தமிழில் மொழி பெயர்த்து தமிழ் மொழிப் பாடநூலை உருவாக்க மாத்திமே சிறுபான்மையினர் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

இதில் 2015 ஆம் ஆண்டில் இருந்து கற்பிக்கப்படும் வரலாறுப் பாட நூலாக்கக் குழுவில் சிறுகான்மையினரும் பேருக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். ஆனால் அவர்கள் மௌனிகளாகவே நடத்தப்படுகின்றனர்.

அனுராதபுரம், பொலன்னறுவை, தம்பதெனிய, யாப்பகூவ, பண்டுவஸ்நுவர கொழும்பு, கண்டி, கம்பளை இராசதானி வரையிலான ஆட்சிக்காலங்களில் உருவாக்கப்பட்ட பல தமிழ் சாசனங்களும் கல்வெட்டுக்களும் சுவடிகளும் காணப்பட்டிருந்தன. அவற்றுள் பல திட்டமிட்டு மறைக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

1796 ஆம் அண்டு பிரித்தானியக் கிழகிந்தியக் கம்பனி இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றி 1798 வரை ஆட்சி செய்தது. 1798 – 1802 வரை இரட்டை ஆட்சி முறையும் (கம்பனியும் பிரித்தானிய அரசும்) 1802-1815 வரை பிரித்தானிய முடியின் கீழான ஆட்சியும், 1815 இல் மலையகம் (கண்டி) கைப்பற்றப்பட்டதில் இருந்து 1948 வரை முழு இலங்கையையும் பிரித்தானியரே ஆட்சி செய்து வந்தனர். 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தாலும் 1972 வரை பிரித்தானிய டொமினியன் அந்தஸ்திலான ஆட்சி முறையே நடைபெற்றது.

(தொடரும்...)





சிறுவர் உரிமை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்பதில் பல்வேறு சர்தேச நிறுவனங்கள் பெருமளவில் முனைப்புடன் செயற்படுகின்றன. அதில் யுனிசெப் நிறுவனத்தின் செயற்றிட்டம் பெருமளவில் பரந்ததாக காணப்படுகின்றது.

இதனை அடிப்படையாகக் கொண்டு யுனிசெப் தற்போது இலங்கையில் Business Council ஒன்றை நிறுவி அதனூடாக சூழல் பாதுகாப்பு, சிறுவர் உரிமைகள் மற்றும் நிைபேறான செயற்றிட்டம் போன்றவற்றை முன்னடுக்கவுள்ளது.

நாட்டில் சிறுவர் உரிமை மற்றும் நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில் யுனிசெப் அமைப்புக்கும் ,முன்னனி வணிகத் தலைவர்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்களுக்கு இடையில் மூலோபாயக் கூட்டாண்மையை ஏற்படுத்தி வர்த்தக சபையொன்றை யுனிசெப் ஆரம்பித்துள்ளது.

இந்த வர்த்தக சபையானது சிறுவர்களின் உரிமைகளுக்காகச் செயற்படுவதற்கும், இலங்கையில் உள்ள சிறுவர்கள் மற்றும் இளையோரின் நலன்களுக்காகவும் செயற்படக்கூடிய வகையில் தனியார் துறையிலுள்ள பிரமுகர்கள் அடங்கிய குழுவை ஒன்றிணையும் தெரிவு செய்து, அதில் வணிகத் தலைவர்களை வர்த்தக சபை உறுப்பினர்களாக தமது நிறுவனங்களைப் பிரதிநிதி நிறுவியுள்ளனர்.

இதன் ஆரம்ப நிகழ்வாக “பிஸ ினஸ் கவுண்ஸில்” உருவாக்கமொன்று கடந்த ஜுன் 28 ஆம் திகதி கொழும்பு Courtyard by Marriot ஹோட்டலில் இடம்பெற்றது. இதில் குறித்த திட்டத்தில் இணைந்துள்ள சுமார் 14 முண்ணனி நிறுவனங்களின் பிரதானிகள் அதிதிகளாக பிரசண்ணமாகியிருந்தனர்.

வர்த்தக சபையின் உறுப்பினர்களாகப் பின்வருவோர் அடங்குகின்றனர்.

திருமதி. ஷிரோமல் குரே,தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜெட்விங் ட்ரவால்ஸ் (பிரைவெட்) லிமிடட்,

திரு . ரதிக .டி. சில்வா நிறைவேற்றுப் பணிப்பாளர், ஐக்கிய நாடுகள் உலகளாவிய ஒப்பந்தம் (வலையமைப்பு இலங்கை),

திரு. டிலான் பெர்னாந்து,பிரதம நிறைவேற்று அதிகாரி, டில்மா சிலோன் ரீ கம்பனி பிஎல்சி

கலாநிதி.ரொஹான் பெர்னாந்து – பிரதம நிறைவேற்று அதிகாரி, அட்கின் ஸ்பென்ஸ் பிஎல்சி,

திரு. ஷனில் பெர்னாந்து – தலைவர், சர்வதேச வணிக சங்கம் (இலங்கை),

திரு. ஃபிர்சான் ஹாசிம் – இலங்கைக்கான பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவத்துக்கான ஆசிய பசுபிக் கூட்டணி,

திரு. ரஞ்சித் பேஜ் – பிரதித் தலைவர், கார்கிள்ஸ் (சிலோன்) பிஎல்சி

திரு.அஷோக் பத்திரகே – பிரதம நிறைவேற்று அதிகாரி, சொஃப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பிஎல்சி

திருமதி. அயோத்யா பெரேரா – முகாமைத்துவப் பணிப்பாளர், சம்பத் வங்கி பிஎல்சி

கலாநிதி. ரொஷான் ராஜதுரை – முகாமைத்துவப் பணிப்பாளர், ஹெய்லிஸ் பிளான்டேஷன் துறை

திரு.கே.ஆர் .ரவீந்திர – பிரதம நிறைவேற்று அதிகாரி, பிரின்ட்கெயர் பிஎல்சி

திரு.சுபுன் வீரசிங்ஹ – குழும பிரதம நிறைவேற்று அதிகாரி, டயலொக் அக்ஸியாட்டா பிஎல்சி

ஷோமாலி விக்ரமசிங்ஹ – குழும முகாமைத்துவ பணிப்பாளர்,சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடட் மற்றும் திருமதி கஸ்தூரி

செல்வராஜா வில்சன் – குழும நிறைவேற்று அதிகாரி, ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி.

ஆகிய நிறுவனங்களின் பிரதானிகளே பிரசண்ணமாகியிருந்தனர்.

மேலும், இந் நிகழ்வில் ஒரு சிறப்பம்சமாக மாநாட்டில் அதிதிகள் முன்னிலையில் ஒரேயொரு மாணவிக்கு மாத்திரம் விழிப்புணர்வு பேச்சு ஒன்றுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த மாணவி சம்மாந்துறை அல் – அர்சத் மஹா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜலீல் பாத்திமா மின்ஹா ஆவார். 11 வயது நிரம்பிய இந்த மாணவி தனது இள வயதிலேயே கலைத்துறையில் தன்னை அடையாளப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


பொதுவாக பாடசாலை மாணவர்கள் சாதாரண தரம், உயர்தரம் இப்படியான காலங்களில்தான் இணைப்பாட விதானங்களில் அதிக ஆர்வம் செலுத்துவதுண்டு.

ஆனாலும், இந்த மாணவியானவள் தன்னுடைய 11 வயதிலேயே சர்வதேச நிறுவனமொன்றின் பெறுமதியான சபையில் தடுமாற்றம், தயக்கம் எதுவுமே இல்லாது தையரியமாகவும், தெளிவாகவும் தனது உரையை கொண்டு சென்றார்.

உண்மையில் இந்த சிறு வயதில் இப்படியான சர்தேச அளவிலான நிறுவனத்தின்; அதிலும் குறிப்பாக இலங்கையின் தொழில் வல்லுனர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் இம் மாணவி உரையாற்றியிருப்பதானது அம் மாணவியின் ஊருக்கும், பாடசாலைக்கும் பெரும் மெச்சத்தக்க விடயமாகும்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய யுனிசெப் ஸ்ரீ லங்காவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக் கூறியதாவது,

“வணிகத் தலைவர்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்களுக்கு உடனுழைப்புடன் கூடிய தளத்தை உருவாக்கும் நோக்கில் யுனிசெப் ஸ்ரீ லங்கா வர்த்தக சபையை ஆரம்பிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். அத்தோடு இந்த சபையின் ஊடாக இலங்கையிலுள்ள சிறுவர்களின் வாழ்க்கையில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் நிலையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் தனியார் துறையின் சக்தியைப் பயன்படுத்துவது இதன் நோக்கமாக அமைந்துள்ளது” – என்றார்.







இதே வேளை சிறப்புரையாற்றிய பாடசாலை மாணவியான ஜலீல் பாத்திமா மின்ஹாவின் உரையிலிருந்து:

“வானிலை என்றால் என்ன? என நோக்குவோம். ஒரு நாளில் 24 மணி நேரத்துக்குள் ஏற்படும் சூரிய வெப்பம், மழைப் பொழிவு, காற்றின் வேகம். காற்றின் அழுத்தம் இன்னும் பல விடயங்களில் ஏற்படும் மாற்றமேதான் வானிலை என அழைக்கப்படும்.

காலநிலை மாற்றத்துக்கான காரணிகளாக 01. வெப்ப நிலை 02. கற்று 03 , காற்றின் அழுத்தம் 04 ஈரப்பதம் 05. பசுமை இல்ல வாயு 06. மழைப் பொழிவு போன்றவைகளையும் குறிப்பிடலாம். – காலநிலை மாற்றம் ஏற்படுவதால் – சமூக, சுற்றுச் சூழல் அமைப்புகளுக்கும் , மனிதர்கள் உயிர் வாழ்வதையும், இயற்கை நிலைப்பாட்டை உறுதி செய்வதிலும் மற்றும் சீரற்ற மழை வீழ்ச்சி, சமூக பொருளாதார இழப்பகளுடன் சுற்று சூழல் பாதிப்புக்களும் இடம்பெறும் . மேலும் சூரிய கதிரில் UV (ultra Valth ) Race கதிர் வீச்சை ஓஷோன் படலம் தனது படையால் சுத்தம் செய்து நல்ல கதிர்களை பூமிக்கு விடுகிறது.

வளி மண்டலத்தில் வாயுக்களின் அளவுகளாக : நைட்ரைஜன்- 78% , ஒக்சிசன் - 21%, ஆர்க்கன் - 0.9%, காபனீர் ஒட்சைட்டு - 0.03% , ஏனையவை - 0.004% .

காலநிலை மாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகளில் மிகப் பிரதானமானது- வெப்பநிலை ( Temproture ) - அதாவது ஒரு பொருளினுடைய சூட்டின் அளவே வெப்பநிலை எனலாம். வளிமண்டலத்தின் காற்று வெப்பநிலை அதிகரிப்பதனால் -உலகமே பாதிக்கப்படுகின்றது .

வெப்ப நிலையைத் தீர்மானிக்கும் காரணிகளாவன: அச்ச ரேகை, வளி அமுக்கம், நிலத்தின் தன்மை, சரிவுத் தன்மை , உயரம், மண்ணின் தரம், தாவரம் - காடுகள் போன்றவைகள்.

உலகின் அதிகபட்ச வெப்பநிலை - 1913.July-10 கலிபோனியாவில் மரண பள்ளத் தாக்கு ( Deth vale) எனும் இடத்தில் 56.7 டிக்றி செல்சியஸ் உணரப்பட்டது .

குறைந்தபட்ச வெப்ப நிலையானது - அந்தாட்டிக்காவில் உள்ள ஓர் பகுதியான - சோவியத் வெஸ்டென் - 1983 / July/21ம் திகதி - மைனஸ் 89.2 டிக்றி செல்சியஸ் உணரப்பட்டது.

காலநிலை மாற்றத்தினால் வெப்பநிலை மாற்றம் அதிகரிக்கிறது . என்பதாக 2007 ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான சபை ( Inter Govermental Pane| on climate Change ) குறிப்பிடுகின்றது . வலுச்சக்தி பயன்பாட்டினால் 26% வீதமும் , கைத் தொழில் செயற்பாட்டினால் -19% வீதமும் , போக்குவரத்து செயல்களால் -13% வீதமும், விவசாய செய்கையினால்- 14% வீதமும், காடழிப்பினால் -17% வீதமும் , ஏனையவைகளினால் - 11 % வீதமும் பச்சை இல்ல வாயுக்கள் வெளியேறுகின்றது.

உலகில் ஒரு வருடத்தில் 13.5 மில்லியன் ஹெக்டேயர் காடுகள் அழிக்கப்படுகிறது. அது இலங்கையின் மொத்த பரப்பளவு 6.5 மில்லியன் ஹெக்டேயர் ஆகும். ஆக் இலங்கையைப் போல் இரண்டு மடங்கு காடுகள் அழிக்கப்படுகின்றன.

ஒரு மாதத்துக்கு 20,000 ஹெக்டேயர் அதாவது 50,000 ஏக்கர் மரங்கள் அழிக்கப்படுகின்றன.

ஒரு செக்கனுக்கு ஓர் உதைப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தின் பரப்பளவுக்கு நிகரான அளவு காடுகள் அழிக்கப்பட்ட வண்ணமே உள்ளன.

மக்களின் சுவாசத்துக்கு அடர்ந்த காடுகள் 20மூ சதவீதம் காணப்படல் வேண்டும். ஆனால் இன்று இலங்கையில் அடர்ந்த காடுகளின் சதவீதம் மிகவும் குறைந்த அளவான 17.2 % சதவீதமாகவே காணப்படுகின்றது.

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் காடுகளின் வீதங்களை சற்று நோக்குவோமானால்- 1900 ம் ஆண்டில் 84%, 1956 ல்-44%, 1982ல் - 32%, 2000ல் - 30% தற்போது - 29.2% வீதமாகக் காணப்படுகின்றது.

இலங்கையின் மாவட்ட ரீதியாகக் காடுகளின் சதவீதமாக பார்க்கையில் - அம்பாறை மாவட்டம்- 37 % , திருகோணமலை மாவட்டம் -34%, மட்டக்களப்பு மாவட்டம் - 8 % , கொழும்பு மாவட்டம் மிகவும் பரிதாபம் - 0 % காணப்படுகிறது. பயங்கரத்துக்குள் துளைந்து விட்டோம். மனிதரிகளின் சுவாசிப்புக்கு பாதிப்பு நெருங்கிக் கொண்டிருக்கிறது. மனிதர்கள் அழிவுக்குள் சென்று கொன்டிருக்கிறார்கள்.

நான் இச்சபையினோர் முன்னிலையில் ஓர் வேண்டுகோளை சர்வதேசத்துக்கு விடுக்கிறேன். அதாவது உலகளவில் வெப்பம் அதிகரிப்பினை தடுப்பதற்காக பிரான்ஸ் நாட்டின் தலைநகரமான பாரிஸில் 2015 ம் ஆண்டு - இந்நூ ற்றாண்டின் முடிவில் வெப்பநிலை அதிகரிப்பை 02டிக்கிரி செல்சியஸ்ஸ ால் குறைத்தல் அல்லாது போனால் 1.5 டிக்கிரி செல்சியஸினாலாவது இந்த வெப்பநிலையைக் குறைக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது.

இல் ஒப்பந்தத்தில் 12 . டிசம்பர். 2015 இல் 55 நாடுகள் கையொப்பம் இட்டுள்ளன. பாரிஸ் உடன்படிக்கை 2016 - நவம்பர் -4ம் திகதி அமுலுக்கு வந்தது. இலங்கை நாடானது 2016 - ஏப்ரல்- 22 ம் திகதியே கைச்சாத்திட்டு விட்டது.

இச் சபை மூலமாக பகிரங்க அரைகூவல் ஒன்றினை விடுகிறேன். 2015 பாரிஸ் ஒப்பந்தத்தில் இன்று வரையும் கையெழுத்திடாத உலக நாடுகளின் தலைவர்களே! இவ் ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டு இணைந்து கொள்ளுங்கள் என அழைப்பு விடுகிறேன்.” - என்றார்.

காடழிப்புகள் மற்றும் மரங்களின் இன்றியமையா தன்மைய அவற்றின் தாக்கங்கள் குறித்த இந்த உரையில் 2015 பாரிஸ் உடன்படிக்கையில் இதுவரையும் கைடியழுத்திடாத உலக நாடுகளின் தலைவர்களை விழித்து அழைப்பு விடுத்தமை சிறப்பம்சமாகும்.

கியாஸ் ஏ. புஹாரி





# 6.9 பில்லியன் ரூபா PAT I பதிவு செய்துள்ளது HNB





சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கை எதிர்கொண்ட பாரிய பொருளாதார நெருக்கடியை நாடு எதிர்கொண்ட ஒரு கொந்தளிப்பான ஆண்டைத் தொடர்ந்து, HNB PLC 2023 ஆம் ஆண்டிற்கான ஒரு பலம்மிக்க ஆரம்பத்தை உருவாக்கியது,

இதன்காரணமாக ஆண்டுக்கு 80மூ வீதம் அதிகரித்து, 10.7 பில்லியன் ரூபாவைப் பதிவு செய்தது, அதே நேரத்தில் வரிக்கு பிந்தைய இலாபமாக (PAT) 6.9 பில்லியன் ரூபாவாக இருந்ததுடன் முதல் காலாண்டில் 42% வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதன்படி குழு முறையே 11.3 பில்லியன் ரூபா மற்றும் 7.3 பில்லியன் ரூபாவாக ஒருங்கிணைக்கப்பட்ட வரிக்கு முந்தைய இலபம் (PBT) மற்றும் வரிக்கு பிந்தைய இலாபம் (PAT) அமைந்திருந்தது.

முதல் காலாண்டின் செயல்திறன் குறித்து கருத்து தெரிவித்த HNB PLC இன் தலைவர் அருணி குணதிலக்க, “கடந்த ஆண்டு ஏற்பட்ட பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சீர்குலைவுகளில் இருந்து நாடு மீள முடியாமல் இருக்கின்ற போதிலும், 2023 இன் முதல் மூன்று மாதங்களில் வங்கி ஒரு உறுதியான செயல்திறனைப் பதிவு செய்துள்ளது - என தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவில் அதிக வட்டி விகிதங்கள், 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 31.6 பில்லியன் ரூபா நிகர வட்டி வருவாயைப் பதிவு செய்ய வங்கிக்கு உதவியது, இது 87% ஆண்டுக்கு ஆண்டு (YoY) வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. எமது டிஜிட்டல் சேவை பக்கமாக பலர் ஈர்த்துக் கொள்ளப்பட்டதன் மூலம் அதிக கார்ட் விநியோகத்தால், நிகர கட்டணம் மற்றும் தரகு வருமானம் ஆண்டுக்கு ஆண்டு (லுழலு) 31மூ வீதம் அதிகரித்து 4.2 பில்லியன் ரூபாவாக அமைந்திருந்தது.

சர்வதேச நாணய நிதிய (IMF) திட்டத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட நேர்மறையான சிந்தைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட அந்நிய செலாவணி பணப்புழக்கம், அந்நிய செலாவணி கட்டுப்பாடுகளில் ஒரு பகுதி தளர்வுக்கு வழிவகுத்தது.

இது இலங்கை ரூபாயின் பெறுமதியை ஓரளவுக்கு அதிகரிக்க வழிவகுத்தது. மார்ச் 2023 வரையிலான 3 மாதங்களில் 10% சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. இதன் விளைவாக நிகர அந்நிய செலாவணி இழப்புகள் காரணமாக காலாண்டில் வங்கி சுமார் 2 பில்லியன் ரூபா நிகர மறுமதிப்பீட்டு இழப்பை பதிவு செய்தது.

# PRISL பட்டமளிப்பு விழா



இலங்கையின் பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் கல்வியகம் (Plastics & Rubber Institute of Sri Lanka - PRISL), அதன் முக்கியமான பட்டமளிப்பு விழாவை அண்மையில் BMICH இல் நடாத்தி தனது பட்டப்படிப்பு மாணவர்களின் சாதனைகளை கௌரவித்தது,

பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் கைத்தொழிலுக்கு தரமான கல்வியின் முக்கியத்தும் அவசியமென எடுத்துரைக்கும் மேடையாக இந்த பட்டமளிப்பு விழா அமைந்தது. சிறப்பான அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சியை வெளிப்படுத்திய பட்டதாரி மாணவர்கள், அவர்கள் அடைந்த சாதனைகளுக்காக அங்கீகாரமளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

கைத்தொழில்துறையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தான் வகிக்கும் முன்னணி பங்களிப்பிற்கு பெயர் பெற்ற PRISL ஆனது, பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் துறையில் குறிப்பிடும்படியான பங்களிப்பை வழங்கக் கூடிய வெற்றிகரமான பட்டதாரிகளை உருவாக்குவதில் பெருமை கொள்கிறது.

# பட்டதாரிகளை கௌரவித்த DIMO

DIMO Academy of Technical Skills (DATS), 2022 ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவில் பட்டதாரிகளுக்கு பட்டமளித்து கௌரவிக்கும் முகமாக, சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தனது 31ஆவது பட்டமளிப்பு விழாவை அண்மையில் நடாத்தியிருந்தது.

உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட Automobile Mechatronics தொழில்நுட்ப வல்லுநர்கள்களின் மற்றொரு தொகுதியை இலங்கையில் உருவாக்கியுள்ள இந்த விழாவானது, கல்வியகத்திற்கு ஒரு பெருமையான தருணமாகும்.

இவ்விழாவில் German Diploma in Automobile Mechatronics மற்றும் Certificate Course in Automobile Mechatronics கற்கைகளை வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்களுக்கு அவர்களுக்கான பட்டங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. Automobile இனை Mechanical, Electrical, Electronics, IT அம்சங்களாக ஒருங்கிணைத்து ஒரே விரிவான திறனுடன் Automobile Mechatronics ஆக வழங்கும் இலங்கையின் முதலாவதும் ஒரேயொரு தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) நிறுவனமாக னுயுவுளு விளங்குகின்றது.

இப்பட்டமளிப்பு விழாவின் பிரதம அதிதியாக இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் Holger Seubert கலந்து கொண்டார். அத்துடன் இலங்கையிலுள்ள ஜேர்மன் கைத்தொழில் மற்றும் வர்த்தக (AHK) பிரதிநிதிகள் குழுவின் பிரதம பிரதிநிதி Marie Antonia von Schönburg மற்றும் Goethe - Institute Colombo நிறுவனத்தின் பணிப்பாளர் Stefan Winkler ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அதே போன்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பணிப்பாளர் மஹேந்திர குமாரசிங்க, இலங்கை மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் திட்டமிடல் பணிப்பாளர் ரி. செந்தூரன், DIMO நிறுவனத்தின் தலைவரும் அதன் முகாமைத்துவ பணிப்பாளருமான ரஞ்சித் பண்டிதகே, DIMO குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கஹநாத் பண்டிதகே, DIMO நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர்/ CHRO திருமதி தில்ருக்ஷி குருகுலசூரிய உள்ளிட்ட பல அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் யூனிலீவர் ஸ்ரீலங்கா ஒப்பந்தம்



பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், இளைஞர்களை வலுவூட்டுவதற்குமான அர்ப்பணிப்புடன், நாடளாவிய ரீதியில் தொழில் மேம்பாட்டுத் திட்டத்தைத் ஆரம்பிப்பதற்காக, யூனிலீவர் ஸ்ரீலங்கா ஆனது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் கைகோர்த்துள்ளது.

இந்த முன்முயற்சியானது தொழில் வாய்ப்புகளை உருவாக்கி, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலில் இளைஞர்களுக்கான எதிர்காலத்திற்கு ஏற்ற தொழில்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இறுதியில் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பை மேற்கொள்வதையும் இது அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இலங்கை இளைஞர்களை, ஒரு நோக்கத்தைக் கொண்ட மற்றும் எதிர்காலத்திற்கு ஏற்ற தொழிலைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு, யூனிலீவர் ஸ்ரீலங்கா மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இணைந்து முதலில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் 350 இற்கும் அதிக பங்கேற்பாளர்களுக்கு பயிற்சிப் பட்டறைகளை நடத்தவுள்ளது.

இத்திட்டம் பின்னர் நாட்டின் ஏனைய பகுதிகளையும் உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்படும். தொழில் வல்லுநர்களைச் சந்திப்பதற்கும், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலில் ஒரு தொழிலைத் தொடர்வதற்கான அறிவுடன் தெளிவான தொழில் நோக்கங்களை நிறுவுவதற்கான வழிகாட்டல்களை பெறுவதற்கான வாய்ப்பை பங்கேற்பாளர்கள் பெறுவார்கள்.

வர்த்தக சுடர்



# நெஸ்லேவின் தென்னைப் பயிர்ச்செய்கை திட்டம் மத்திய மாகாணத்திற்கும்


நெஸ்லே லங்காவின் தனித்துவமானதொரு சமூக அபிவிருத்தித் திட்டமான நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டம் அண்மையில் விரிவுபடுத்தப்பட்டு, மத்திய மாகாணத்தில் உள்ள 500 கிராமப்புற குடும்பங்கள் பயனடைவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தென்னைப் பயிர்ச்செய்கை சபையுடன் இணைந்து ஏழாவது ஆண்டாக முன்னெடுக்கப்படும் இத்திட்டமானது, இலங்கையில் தென்னைப் பயிர்ச்செய்கையை மேம்படுத்தும் நோக்குடன் தமது வீடுகளில் தென்னைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் 4,500 பேருக்கு கலப்பின தென்னங் கன்றுகள் மற்றும் ஏனைய வளங்களை வழங்குகின்றது.

நிக்கவெரட்டிய, கெபித்திகொல்லாவை, அரலகங்வில, ஹொரவப்பொத்தானை, கந்தளாய் மற்றும் அரந்தலாவை ஆகிய இடங்களில் மாதிரி பண்ணைகளை நிறுவி, தென்னைப் பயிர்ச்செய்கையின் சிறந்த நடைமுறைகள் குறித்து பயனாளிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கும் இத்திட்டம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் ஏழாவது மற்றும் சமீபத்திய மாதிரிப் பண்ணை கந்தளமவில் நிறுவப்பட்டுள்ளது.

இந்த அரச-தனியார் கூட்டாண்மை குறித்த தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவரான திருமதி மாதவி ஹேரத் அவர்கள், “நெஸ்லே தென்னைப் பயிர்ச்செய்கைத் திட்டத்தை மென்மேலும் கிராமப்புற குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் விரிவுபடுத்துவதில் நான் மிகுந்த பெருமையுடனும், நன்றியுடனும் உள்ளேன் என்றார்.


# மக்கள் வங்கியின் நிதியியல் பெறுபேறு



மக்கள் வங்கியானது 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த அதன் காலாண்டிற்கான நிதியியல் பெறுபேறுகளை இன்று அறிவித்ததுடன், மொத்த ஒருங்கிணைந்த செயல்பாட்டு வருமானம் மற்றும் வரிக்கு முந்தைய இலாபம் ஆகியன முறையே ரூபா 24.0 பில்லியன் மற்றும் ரூபா 7.2 பில்லியன் (2022-1வது காலாண்டு: ரூபா 42.6 பில்லியன் மற்றும் ரூபா 11.0 பில்லியன்) தொகையாகப் பதிவாகியுள்ளது.

2022 ஆம் ஆண்டைப் போலவே, இக்காலாண்டில் அதிக வட்டிச் செலவுகள் தொடர்ந்து வகைப்படுத்தப்பட்டதுடன், இக்காலப்பகுதியில் நிலவிய அதிக வட்டி வீத சூழலே இதற்கு காரணம். இது 2022, 1 ஆம் காலாண்டுடன் ஒப்பிடும் போது, ஒருங்கிணைந்த தேறிய வட்டி வருமானம் 49.7வீதத்தால் குறைவடைந்து ரூபா 15.3 பில்லியனாக இருந்தது.

வங்கியின் சில கடன்களின் மீள்விலையிடல் நடவடிக்கையை அதன் அதிகம் பாதிக்கப்படக்கூடிய வாடிக்கையாளர் பிரிவுகளுக்கு ஒத்திவைக்கும் முயற்சிகளின் பிரதிபலிப்பிற்கு இதுவும் ஒரு வகையில் காரணமாகும். ஒருங்கிணைக்கப்பட்ட தேறிய கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் ரூபா 4.5 பில்லியன் ஆகும்.




# இறக்குமதி கட்டுப்பாடுகள்: CMTA கவலை

தெற்காசியாவின் மிகவும் சிரேஷ்ட வாகன சங்கமான சிலோன் மோட்டார் வாகன வர்த்தகர்கள் சங்கம் (CMTA), தற்போதைய இறக்குமதி விதிமுறைகளில் காணப்படும் நியாயமற்ற தன்மை தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ளது.

அதி உயர் தொலைக்காட்சிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் போன்ற ஆடம்பரமான பொருட்களின் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படும் நிலையில், மோட்டார் சைக்கிள்கள் போன்றவை தடை செய்யப்பட்டுள்ளதாக அது சுட்டிக்காட்டுகின்றது.

இந்தக் கட்டுப்பாடுகளால் அதிகளவில் பாதிக்கப்படுகின்ற, அன்றாட பணிகளுக்காக பொதுப் போக்குவரத்தை நம்பியிருப்போர், குழந்தைகளைக் கொண்ட பெற்றோர்கள் மற்றும் சிறு வணிக உரிமையாளர்கள் உள்ளிட்ட தனிநபர்கள் எதிர்கொள்ளும் போராட்டங்களைக் கருத்தில் கொண்டு, நியாயமான இறக்குமதிக் கொள்கையின் அவசியத்தை ஊஆவ்யு வலியுறுத்துகிறது.

மக்கள்தொகையில் கணிசமானோர், தங்கள் குடும்பங்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதிலும், தங்கள் வணிகங்களை மேம்படுத்துவதிலும் சிரமங்களை எதிர்கொண்டுள்ள நிலையில், ஆடம்பர வகுப்பினருக்கு பிரத்தியேகமாக அவசியமாகின்ற ஆடம்பரப் பொருட்களை இறக்குமதி செய்வதைக் காண்பது கவலை அளிப்பதாக சங்கம் தெரிவிக்கின்றது.

கட்டுப்படியான விலையில் மோட்டார் சைக்கிள்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியை மேற்கொள்ள அனுமதி மறுக்கும் அதே வேளையில், வசதி படைத்தவர்கள் உயர்தரப் பொருட்களை கொள்வனவு செய்ய அதிக அளவில் செலவிட வாய்ப்பளிக்கின்ற, இறக்குமதி விதிமுறைகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வு நியாயமற்றது என ஊஆவ்யு உறுதியாக நம்புகிறது.

ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதி காரணமாக, குறிப்பாக 1,000 அமெரிக்க டொலர்கள் மற்றும் அதற்கும் அதிகமான விலைகளுடன் கூடிய தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ. 700,000-1,000,000 மில்லியனாக அல்லது அதற்கு மேலான சில்லறை விலையில் விற்பனையாவதோடு, 900 டொலரிற்கு அதிக இரட்டைக் கதவு குளிர்சாதனப் பெட்டிகள் ரூ. 1,000,000 வரையான சில்லறை விலையில் விற்பனையாவதோடு, 1,000 டொலர்களுக்கு அதிக விலையுள்ள ஸ்மார்ட்போன்கள் ரூ. 500,000 - 750,000 எனும் சில்லறை விலையில் விற்பனையாகின்றமை, சமூகத்தில் வருமான ஏற்றத்தாழ்வுகளை மேலும் அதிகரிக்கிறது.

அதனுடன் ஒப்பிடுகையில், 110cc பெற்றோல் ஸ்கூட்டர் சுமார் 650 டொலராகவும், முச்சக்கர வண்டியின் விலை 1,300 டொர்களாகவும் அமைகின்றன. இறக்குமதி தடைப்பட்டியலில் இருந்து பல பொருட்கள் அண்மையில் நீக்கப்பட்டிருந்த போதிலும், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் போன்ற அத்தியாவசிய பொருட்கள் இதில் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பது கவலையளிக்கிறது.

# IELTS Prize 2023 க்கான விண்ணப்பங்கள் தகோரல்

வருடாந்த போட்டியினூடாக IELTS பரீட்சார்த்திகளுக்கு ஆங்கில மொழி மூல பல்கலைக்கழகங்களில் கற்கை கட்டணங்களில் 5000 ஸ்ரேளிங் பவுண் வரை ஆதரவளிக்கப்படுகின்றது.

இலங்கை, சீனா, ஜப்பான், ஹொங் கொங், இந்தோனேசியா, கொரியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்வான், தாய்லாந்து, வியட்நாம், பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு இந்த ஆண்டு IELTS Prize இல் பங்கேற்க முடியும்.

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் IELTS ஊடாக பட்டப்படிப்பு அல்லது பட்டப்பின்படிப்பு கற்கைகளுக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்களுக்கு இதில் பங்கேற்க முடியும் என்பதுடன், 2023 ஜனவரி முதல் 2024 மார்ச் மாதம் வரை தமது கற்கையை ஆரம்பிப்பவர்களுக்கு பொருந்தும் வகையில் அமைந்திருக்கும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2023 செப்டெம்பர் 15ஆம் திகதி ஆகும்.

போட்டிகரமான விண்ணப்ப தெரிவு முறையினூடாக, இலங்கையிலிருந்து மொத்தம் ஒன்பது வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அவர்களுக்கு தமது கற்கைகளை தொடர்வதற்கு ஆதரவளிக்கும் வகையில் பணப்பரிசை பெற்றுக் கொள்ள முடியும்.





# தந்தையர்களுக்கு பரிசுப் பொதிகள்

இலங்கையின் முன்னணி ஆடவர் ஆடை வர்த்தக நாமமாக (Brand) Hameedia, தந்தையர் தினத்தை முன்னிட்டு 1,000 பரிசுப் பொதிகளை வழங்கி தந்தையர் தினத்தை கொண்டாடுகின்றது.

Hameedia Facebook அல்லது Instagram Clhf நேரடியாக எம்மை தொடர்பு கொண்டு அல்லது marketing@hameedia.com என்ற மின்னஞ்சல் மூலமாக இணைந்து, "உங்கள் தந்தை ஏன் சிறப்புமிக்கவர்" என்பதை எங்களுக்குத் தெரியப்படுத்தி எமது பிரம்மாண்ட குலுக்கல் போட்டியில் பங்குபற்றி 1,000 பரிசுப் பொதிகளை வென்று உங்கள் தந்தையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்திடுங்கள்.

பெற்றோர் தமது குழந்தைகளை வளர்ப்பதற்கு மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை, உணவு, உடல் ஆரோக்கியம், கல்வி, ஆடை அணிகலன்கள் போன்ற அனைத்தையும் தங்கள் குழந்தைகளுக்கு மிகச்சிறந்த கவனத்துடன் வழங்கி வருவதனை உறுதி



செய்கின்றனர்.

குழந்தைகள் வளர வளர, உயர்கல்வி முடித்து வேலை பார்க்கத் தொடங்கி திருமணம் செய்து, வாகனம், வீடு போன்றவற்றை தமக்கு ஏற்றவாரு பெற்று தமது வாழ்வை சிறப்பாக அமைத்துக் கொள்கின்றனர். இத்தகைய வாழ்க்கை இலக்குகளை அடைவதற்கான செயல்பாட்டின் போது பெரும்பாலும் பெற்றோர்கள் ஓரங்கட்டப்படுகிறார்கள்.

# தங்க விருதுகளை வென்ற MAS KREEDA

அண்மையில் துபாயில் நடைபெற்ற 2023 RoSPA (Royal Society for the Prevention of Accidents) விருது நிகழ்வில் "சாதனை" பிரிவில் MAS KREEDA இரண்டு தங்க விருதுகளை வென்றது.

தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் நிறுவனத்தின் பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்பை குறித்து இச் சாதனைகள் வழங்கப்பட்டது.

MAS KREEDA Synergy மற்றும் Shadeline உற்பத்தி நிலையங்கள் ஆகியவை இந்த சாதனையின் பெருமைக்குரிய உரிமையாளர்களாவர். 67 ஆண்டுகளாக இயங்கும் RoSPA Health and Safety Awards, என்பது ஐக்கிய இராஜ்ஜியத்தின் மிகப்பெரிய தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விருது வழங்கும் திட்டமாகும்.

RoSPA உலகளவில் 50க்கும் அதிக நாடுகளில் இருந்து ஆண்டுதோறும் 2,000 க்கும் மேற்பட்ட உள்ளீடுகளை ஈர்ப்பதுடன், 7 மில்லியனுக்கும் அதிகமான ஊழியர்களை சென்றடைகிறது.

குழு பலத்தை மேம்படுத்துவதிலும், நிறுவனத்தின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளுக்கான அங்கீகாரத்தை வழங்குகிறது. மேலும், RoSPA விருதுகள், விபத்துகளைத் தடுப்பதற்கான உலகளாவிய அளவுகோலாக இருக்கும் அதே வேளையில், ஊழியர்களின் வாழ்க்கையில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

